
# "காலிங்கராயன் கால்வாய்" ஒரு மதிப்பீடு

- முனைவர். ப. பத்மநாபன், 9443658700
செயலர், செம்மொழித் தமிழாய்வுப் பேரவை, புதுச்சேரி.




முனைவர் செ. இராசு எழுதிய 'காலிங்கராயன் கால்வாய்' எனும் இந்நூல் காலிங்கராயன் கால்வாய் தோன்றிய வரலாறு பற்றி வரலாற்றுச் சான்றுகளோடு விவரித்துக் கூறும் நூலாகும். கி.பி.13-ஆம் நூற்றாண்டில் பிற்காலப் பாண்டியர் காலத்தில் மன்னர்களுக்கு அடுத்த நிலையில் படைத் தலைவராக விளங்கிய காலிங்கராயன் என்பவர் வெட்டிய கால்வாய் மற்றும் கட்டிய அணையைப்பற்றியதே இந்நூலாகும்.

கொங்குமண்டல சதகம், சென்னியாண்டவர் பிள்ளைத்தமிழ், ஈரோடு ஐயனாரப்பன் பள்ளு, பூந்துறைப்புராணம் முதலான நூல்களில் பாடப்பெற்ற, பெருமைவாய்ந்த கொங்கு மண்டலத்தில் தலைமைச் சிறப்புடைய மேல்கரைப் பூந்துறை நாட்டின் இரண்டாவது தலைநகராக விளங்கிய வெள்ளோடு என்ற ஊரே காலிங்கராயன் பிறந்த ஊர் ஆகும். கி.பி. 13-ஆம் நூற்றாண்டில் சாத்தந்தை குலத்தில் தோன்றிய இவரின் இயற்பெயர் லிங்கையன் என்பதாகும். கணிதம், நிலவியல் மற்றும் பொறியியல் துறைகளில் இவர் வல்லவராகத் திகழ்ந்துள்ளார். கல்வெட்டில் இவர் பெயர் கனகபுரம் காலிங்கராயர் என்று காணப்படுகிறது.

கொங்கு மண்டல மக்களின் நலம் காக்கவும் தண்ணீர்ப் பஞ்சத்தைப் போக்கவும் விளைநிலங்களுக்குக் கால்வாய்களின் வழிநீர்பாய்ச்சவும் விழைந்த காலிங்கராயன் வெட்டிய கால்வாயே காலிங்கராயன் கால்வாய். பவானி ஆற்றிலிருந்து கால்வாயை எவ்வாறு எப்படி வெட்டிக் கொண்டுபோவது என்ற நினைவிலேயே உறங்கிப்போன காலிங்கராயன் கனவில் ஒரு முதிய அந்தணர் தோன்றி "ஒரு பாம்பு வந்து நீ எவ்வாறெல்லாம் கால்வாய் வெட்ட வேண்டும் எனக்

காட்டும், கவலைப்படாதே” என்று கூறி மறைந்துவிட்டார். உடனே விழித்தெழுந்த காலிங்கராயன் தன்வீட்டு வாசலில் பாம்பு ஒன்று படுத்திருப் பதைக் கண்டார். அப்பாம்பு பவானி ஆற்றிலிருந்து வளைந்து நெளிந்து சென்று ஓர் இடத்திற்குச் சென்று அங்கே படுத்துவிட்டது. காலிங்கராயன் இறைவன் வகுத்துக் கொடுத்த வழி அதுதான் என்பதைப் புரிந்துகொண்டு பாம்பு சென்ற வழித்தடத்திலேயே கால்வாயைக் கட்டத் தொடங்கினார்.

கி.பி.1270-ல் கால்வாயைக் கட்டத் தொடங்கிய காலிங்கராயன் கி.பி.1282 வரை கால்வாய் கட்டும் பணியைத் தொடர்ந்து இடைவிடாது தொய்வில்லாது மேற்கொண்டு கால்வாயையும் பாம்பு இறுதியாகப் படுத்த இடத்தில் அணையையும் கட்டி முடித்தார்.

கால்வாயையும் அணைக்கட்டையும் வெட்டியும் கட்டியும் முடிக்கக் காலிங்கராயன் பல இடையூறுகளையும் இடைஞ்சல்களையும் எதிர் கொண்டிருக்கிறார். பவானி ஆற்றிற்கு அருகில் உள்ள மலையை விலைக்கு வாங்கினார். மலை முதல் அணை வரை உள்ள வழித்தடத்தையும் விலைக்கு வாங்கினார். அதன் அடையாளமாக இன்றும் மலையாயிரம் தடமாயிரம் என்ற பழமொழி அப்பகுதியில் வழங்குகிறது. மலையில் உள்ள கற்களை உடைத்து அணைகட்டுவதற்கு மாட்டுவண்டிகளைப் பயன்படுத்தி உள்ளார். வண்டி ஓட்டிகள் மற்றும் இவ்வேலைகளில் ஈடுபட்டோர் களைப்படையாமல் இருக்க வழியெங்கும் தின்பண்டங்களும் உணவும் நீரும் கிடைக்க ஆவன செய்துள்ளார்.

பவானி ஆறு முதல் நொய்யல் ஆறு வரை செல்லும் காலிங்கராயன் கால்வாய் வளைந்தும் நெளிந்தும் (கோணலாய்) செல்வதால் அதற்குக் கோண வாய்க்கால் என்ற பெயரும் உண்டு. கால்வாய் கூட்டாற்று மூலையில் ஒரே மீட்டர் அகலமுடைய தாய் இருக்கிறது. இதைப்பற்றிக் கூறும் நூலாசிரியர் ஒரு பெரிய செல்வந்தர் தமது செல்வத்தை எல்லாம் இழந்துவிட்டு வறியவன் ஆனதுபோல் தோற்றமளிக்கிறது என்கிறார். 32 மைல் நீளமுடைய வாய்க்கால் வளைந்தும் நெளிந்தும் செல்வதால் 56.5 மைல் அளவுக்கு நீண்டுள்ளது.

அணையில் கட்டப்பட்டுள்ள கலிங்கலில் ஏர்க்கலப்பையில் பயன் படுத்தப்படும் கொழுக்களை வைத்து அடுக்கி அதைக் கற்களால் இணைத்து கம்பிகளைக் கொடுத்து ஈயத்தைக் காய்ச்சி ஊற்றி இணைத்துள்ளதைப் பொறியியல் வல்லுநர்கள்

பாராட்டி உள்ளனர்.



கால்வாயைக் கட்டத் தொடங்கியதிலிருந்து அதை முடிக்க எடுத்துக்கொண்ட 12 ஆண்டுகள் வரை காலிங்கராயன் தன் தாடியை மழிக்கவே இல்லை. அணையைக் கட்டி முடித்தபின் அயர்ந்து படுத்துறங்கிய காலிங்கராயனின் தாடியை அவரது உறக்கம் கலையாமல் மழித்தெடுத்த நாவிதனைப் பாராட்டு முகமாக தான் வெட்டிய காலிங்கராயன் கால்வாயின் முதல்கரைக்கு நாவிதன் கால்வாய் எனப் பெயர் சூட்டினார் காலிங்கராயன். பின்னர் ஓர் ஊரை உருவாக்கி அந்த ஊருக்கு நாவிதன்பாளையம் என்ற பெயரைச் சூட்டி அவனுக்குத் தானமாகக் கொடுத்துவிட்ட செயல் அவரது நற்பண்பைக் காட்டுகிறது. காலிங்கராயன் சிறந்த சிவபக்தர் என்பதையும் சிவனுக்குப் பல கோயில்கள் கட்டியுள்ளதையும் நூலாசிரியர் எடுத்துக்காட்டியுள்ளார். காலிங்கராயன் கால்வாய் கட்டப்பட்டதற்கான பல கல்வெட்டுச் சான்றுகளை எடுத்துக்கூறும் நூலாசிரியர் காலிங்கராயன் பின்னால் தெய்வமாக மதிக்கப்பட்டதையும் சுட்டுகிறார்.

இந்நூலாசிரியர் முனைவர் செ.இராசு இக்காலிங்கராயன் கால்வாய் பற்றிய வரலாற்றுச் செய்திகளை எளிய தமிழ் நடையில் முறையாகத் தொகுத்து வழங்கியிருக்கிறார். பவானி ஆறு, நொய்யல் ஆறு, அமராவதி ஆறு ஆகிய மூன்று ஆறுகளை இணைத்து இக்கால்வாயைக் கட்டியிருப்பதனால் இவரையே தேசிய நதிநீர் இணைப்புத் திட்டத்திற்கு முன்னோடியாகக் கொள்ளலாம் என்று **புக்கானன்** என்ற வெளிநாட்டு ஆய்வாளர் புகன்றதை நூலாசிரியர் எடுத்துக்காட்டுகிறார். நூலைப் படிப்பவர் மனத்தில் இக்கால்வாயைக் காண வேண்டும் என்ற ஆவலையும் உணர்வையும் ஆசிரியர் ஏற்படுத்தி உள்ளார்.

| | | |
|---|---|---|
| நூல் ஆசிரியர் | : | முனைவர். புலவர். செ.இராசு |
| நூல் கிடைக்குமிடம் | : | கொங்கு ஆய்வு மையம்<br>புலவர் பூங்குடில்<br>58/2, பாலக்காட்டுத் தோட்டம்,<br>புதிய ஆசிரியர் குடியிருப்புப் பாதை<br>ஈரோடு - 638 011<br>போன் : 0424- 2262664 |
| விலை | : | ரூ.80/- |

# காலிங்கராயனுக்கு சிலை

## தமிழக அரசிற்கு நன்றி

ஈரோடு மாவட்டத்தில் பல பகுதிகள் பாசனம் பெற நற்பணி ஆற்றியவர் காலிங்கராயன் அவர்கள் ஆவார். ஈரோடு மாவட்டத்தின் அணிகலனாகத் திகழ்வது காலிங்கராயன் கால்வாய் ஆகும். இந்த காலிங்கராயன் கால்வாயைக் கட்டிய பெருமை திரு.லிங்கையன் என்கிற காலிங்கராயன் அவர்களையே சாரும். திரு.காலிங்கராயன் பாண்டிய நாட்டுத் தலைவர் ஆன பிறகு தன் ஆளுகைக்குட்பட்ட புன்செய் நிலங்களை நன்செய் நிலங்களாக மாற்ற வேண்டும் என்று திட்டமிட்டு, நாட்டு மக்களின் உதவியுடன் காலிங்கராயன் அணையினைக் கட்டி, கால்வாயினையும் வெட்டினார் என்பது வரலாறு.



காவிரி ஆற்றின் கிளை நதிகளான பவானியையும், நொய்யலையும் இணைக்கும் கால்வாய் காலிங்கராயன் கால்வாய். இதன் மூலம் பவானி ஆற்றிலிருந்து நீர் பிரித்தெடுக்கப்பட்டு, காவிரி ஆற்றின் ஓரமாகவே அதன் தென்கரையில் சுமார் 56 மைல்கள் கிழக்காக ஓடி ஆவுடையார் பாறை என்ற இடத்தில் நொய்யல் ஆற்றில் சங்கமமாகிறது.

பவானி ஆற்றை நொய்யல் ஆற்றுடன் இணைக்க 32 மைல் தூரம் கால்வாய் வெட்டினால் போதும் என்ற நிலை இருந்தபோதிலும், அதிகமான நிலங்கள் பாசனம் பெற வேண்டும் என்ற நோக்கத்துட னும், நீர் தேங்கி நின்று வயலுக்குப் பாய வேண்டும் என்ற எண்ணத்து டனும், நீரின் வேகத்தைக் குறைத்து கரைக்கு வெள்ளத்தினால் ஏற்படும் அழிவுகள் தடுக்கப்பட வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டும், 56 மைல் தூரத்திற்கு இந்தக் கால்வாய் அமைக்கப் பட்டுள்ளது. கால்வாயின் இருகரைகளும் காரையால் கட்டப்பட்டு இருப்பதால் காரை ‘வாய்க்கால்’ என்றும், பாம்பு போல் நெளிந்து செல்வதால் ‘கோண வாய்க்கால்’ என்றும் இதனை அப்பகுதி மக்கள் அழைக்கின்றனர். இதன் மூலம் ஈரோடு மாவட்டத்தில் உள்ள 15,743 ஏக்கர் நிலம் தற்போது பாசன வசதி பெற்று வருகிறது.

இப்படிப்பட்ட வலுவான அணையினையும், கால்வாயினையும் கட்டிக் கொடுத்தவரும், நதிகள் இணைப்பில் முன்னோடியாக விளங்கியவரும், மக்களுக்குப் பல அறப்பணிகளைச் செய்தவருமான திரு. காலிங்கராயன் அவர்களுக்குச் சிலை அமைக்க அறிவிப்பு செய்த தமிழக அரசுக்கு “தொல்புதையல்” சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

**ஆசிரியர்**